# ஆரம்பகால, நவீனகால தப்ஸீர் நூல்களில் "உம்மதன் வஸதா" என்பதன் விளக்கங்கள்: ஓர் ஒப்பீட்டாய்வு

## Interpretations of "Ummatan Wasata" in Tafsir Books: A Comparative Research

M.S. Zunoomy[1] & S.M.M. Mazahir[2]

[1]Department of Arabic Language, South Eastern University of Sri Lanka,
[2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, mazahirsmm@seu.ac.lk,
zunoomyzain94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்ற 'உம்மதன் வஸதா' எனும் சொற்றொடர் தற்கால உலகச் சூழலில் குறிப்பாக இலங்கைச் சூழலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முஸ்லிம்கள் தமது வாழ்வொழுங்கை அல்குர்ஆனிய சிந்தனையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனால் இது பற்றிய ஆய்வு பெறுமானம் மிக்கதாக அமைகின்றது. அச்சொற்றொடருக்கான ஆரம்பகால தப்ஸீர் நூல்கள் மற்றும் நவீனகால தப்ஸீர் நூல்களில் காணப்படும் விளக்கங்களை (தப்ஸீர்) அடையாளப்படுத்தல் மற்றும் காலவோட்டத்தில் 'உம்மதன் வஸதா' என்பதற்கான விளக்கத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதா ஆகிய ஆய்வு நோக்கங்களை கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது. இதற்காக, இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்விற்கான தரவுகள் தப்ஸீர் நூல்கள், ஆய்வுகள், நூல்கள், இணையக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. இந்தவகையில், ஆரம்பகால, நவீனகால தப்ஸீர் நூல்கள் 'உம்மதன் வஸதா' என்பது 'இ.்.ப்ராத்' எனும் வரம்புமீறலுக்கும் 'த.்.ப்ரீத்' எனும் பொடுபோக்கிற்கும் இடையில் நடுநிலை பேணிக்கொள்வதனையே பிரதானப்படுத்துகின்றன. அவ்வாறே, எல்லா விடயங்களிலும் நடுநிலைமையை பேணிக் கொள்வதை சிறப்பித்துக் கூறுகின்றன. அத்தோடு 'உம்மதன் வஸதா' என்பதற்குரிய விளக்கத்தில் ஆரம்பகால, நவீனகால தப்ஸீர் நூல்களுக்கிடையில் ஒத்த தன்மைகளை அடையாளப்படுத்த முடிகின்றது. தப்ஸீர் நூல்கள் எழுதப்பட்ட கால கட்டத்தில் காணப்படும் விடயங்களை மையமாக வைத்து, முன்னைய நூல்களில் காணப்படும் விடயங்களையும் உட்பொதிந்த அமைப்பில் தப்ஸீர் நூற்கள் எழுதப்படுகின்றன. இந்தவகையில், காலமாற்றம் அல்குர்ஆனிய வசனங்களுக்குரிய தப்ஸீர்களில் தாக்கம் செலுத்துவதாக அமைகின்றது. அல்குர்ஆன் மறுமை வரையுள்ள காலத்திற்கு ஏற்புடையது என்றவகையில், அதிலுள்ள வசனங்களுக்கு காலத்தை கருத்திற் கொண்டு விளக்குவது அவசியமானதாகவும் அது நடுநிலைப் போக்கிக்கான ஆதாரமாகவும் அமைகின்றது என்பன இந்த ஆய்வின் முடிவுகளாகும்.

**திறவுச்சொற்கள்:** தப்ஸீர், நடுநிலைச் சமூகம், உம்மதன் வஸதா, அல்குர்ஆன்

**அறிமுகம்:**

இவ்வுலகிற்கு அருளப்பட்ட இறுதி மார்க்கமான இஸ்லாம் அகீதா விடயங்கள், வணக்க வழிபாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, ஒழுக்க வாழ்வு என மனித வாழ்வின் அனைத்து விடயங்களிலும் கரிசனை கொண்டுள்ளது. இந்தவகையில், அல்லாஹ் அல்குர்ஆனில் இஸ்லாமிய சமூகத்தை 'உம்மதன் வஸதா' என சிறப்பித்துக் கூறியுள்ளான் (02:143). 'வஸதிய்யா' எனும் அறபுச் சொல்லானது நீதம், நேர்மை, நடுநிலைமை, சார்பின்மை போன்ற மொழி ரீதியான கருத்துக்களை கொண்டுள்ளன (இப்னு பாரிஸ், 1991). பொடுபோக்கிற்கும் அத்துமீறலுக்கும் இடையில் நடுநிலைமையாக வாழ்தல் (அபுல் பகாஉ, 1993) என்பது அதன் கருத்தாகும்.

ஷரீஆ ரீதியாக 'வஸத்' என்பது இரு தரப்பில் ஒன்றை விட மற்றையதை அத்துமீறாமல் இரண்டிற்குமிடையில் சமத்துவமாக இருத்தல். கூட்டல் குறைத்தல் இல்லாமல், பொடுபோக்கும் அளவுமீறலும் இன்றி நடுநிலையானவற்றை பின்பற்றுதல் (ஹாஷிம், 1998) என்பதாகும்.

இந்தவகையில், 'வஸதிய்யா' எனும் சொல்லை அல்லாஹ் அல்குர்ஆனில் 'உம்மதன் வஸதா' எனக் குறிப்பிடுகின்றான். இந்த சொற்பிரயோகத்திற்கான விளக்கத்தை ஆரம்பகால மற்றும் நவீனகால தப்ஸீர் நூல்களை மையப்படுத்தி ஆராய இவ்வாய்வு முனைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:**

'உம்மதன் வஸதா' எனும் சொற்பிரயோகத்திற்கு ஆரம்பகால மற்றும் நவீனகால அறிஞர்கள் எவ்வாறு விளக்கமளித்துள்ளனர் மற்றும் காலவோட்டத்தில் புதிய விளக்கங்கள் தப்ஸீர் அறிஞர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளனவா எனும் ஆய்வு வினாக்கள் இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்:**

"உம்மதன் வஸதா" என்பதற்கான ஆரம்பகால தப்ஸீர் நூல்கள் மற்றும் நவீனகால தப்ஸீர் நூல்களில் காணப்படும் விளக்கங்களை (தப்ஸீர்) அடையாளப்படுத்தல்.

காலவோட்டத்தில் 'உம்மதன் வஸதா' என்பதற்கான விளக்கத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்விற்கான தரவுகள் தப்ஸீர் நூல்கள், ஆய்வுகள், நூல்கள், இணையக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்டுள்ளன. ஆரம்பகால, நவீனகால கட்டங்களின் காணப்படும் தப்ஸீர் நூல்களில் எழுமாறாக பத்து தப்ஸீர் நூல்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. ஆரம்பகால தப்ஸீர் நூல்களாக அல்கஷ்ஷாப் - ஸமக்ஷரி, அத்தப்ஸீர் அல்கபீர் - அர்ராஸி, அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன் - குர்துபி, தப்ஸீருல்

குர்ஆனில் அழீம் - இப்னு கஸீர், அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் த.ஃவீல் - பய்ழாவி ஆகியன எடுத்துக்கொள்ளப்பட்டன. அவ்வாறே, நவீனகால தப்ஸீர் நூல்களாக ரூஹுல் ம.ஃஆனி- அலூஸி, அத்தஹ்ரீர் வத் தன்வீர் - இப்னு ஆஷுர், அள்வாஉல் பயான் ஃபீ தப்ஸீரில் குர்ஆன் - அஷ்ஷன்கீதீ, அல்வஸீத் ஃபீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் - தன்தாவீ, தப்ஸீருஷ் ஷ.ஃராவீ - முஹம்மத் ஷ.ஃராவீ ஆகியன எடுத்துக் கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் தரவுப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு:**

''தவ்ருல் கிதாபில் குர்ஆனி பீ வஸதிய்யதில் உம்மதில் முஸ்லிமா: திராஸா மவ்ழு'இய்யா'' (முஸ்லிம் சமூகத்தின் நடுநிலைத் தன்மையில் அல்குர்ஆனின் போக்கு: ஓர் விடய ஆய்வு), அப்துஸ் ஸலாம் ஹம்தான் மற்றும் ஸகரிய்யா இப்ராஹீம், 2008, காஸாவில் அமைந்துள்ள ஜாமிஆ இஸ்லாமிய்யாவின் முதலாவது சர்வதேச விஞ்ஞான ஆய்வு மாநாட்டிற்கு சமர்பிக்கப்பட்ட இவ்வாய்வானது, 'வஸதிய்யா' (நடுநிலைப் போக்கு) எனும் அறபுப் பதத்தினை மொழி ரீதியாகவும், பரிபாஷை ரீதியாகவும் வரைவிலக்கப்படுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து, அகீதா விடயங்களில், வணக்க வழிபாடுகளில் நடுநிலைத் தன்மை பற்றி ஆராய்கின்றது. அவ்வாறே, இது கொடுக்கல் வாங்கல்களில், சிந்தனைகளில், செலவு செய்வதில் நடுநிலைப் போக்கு பற்றி விரிவாக ஆராய்கின்றது. 'வஸதிய்யா' எனும் சொல் நடுநிலைமை, நேர்மை, நீதம் போன்ற கருத்துக்களை கொண்டுள்ளன; சமூகத்தவர்களுக்கிடையில் பரிவை ஏற்படுத்த இஸ்லாம் நடுநிலைப் போக்கை உறுதிப்படுத்தியிருக்கின்றது; அல்லாஹ் இஸ்லாமிய சமூகத்தை நடுநிலைச் சமூகமென சிறப்பித்துள்ளான்; இதனை அவன் ஓர் அரணாக ஆக்கியிருக்கிறான் போன்றன இவ்வாய்வின் பெறுபேறுகளாக அமைந்துள்ளன.

''வஸதிய்யதுல் இஸ்லாம் பில் குர்ஆன் வஸ்ஸுன்னா'' (அல்குர்ஆன், அல்ஹதீஸில் இஸ்லாத்தின் நடுநிலைத் தன்மை), முஹம்மத் பின் அப்தில்லாஹ் அலி என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, விபரிப்பு முறையியலைப் பயன்படுத்தி 'வஸதிய்யா' பற்றி பேசுகின்றது. 'வஸதிய்யா' என்பதன் விளக்கம், அதன் முக்கியத்துவம், அல்குர்ஆனில், அல்ஹதீஸில் 'வஸதிய்யா' போன்ற விடயங்களை இது ஆய்வு செய்கின்றது. மேலும் அகீதா, ஷரீஆ, அக்லாக் (ஒழுக்கங்கள்), நடத்தைகளில் இஸ்லாத்தின் நடுநிலைப் போக்கு பற்றியும் ஆராய்கின்றது. நடுநிலைமைப் போக்கை இழந்துள்ளமைக்கான அடையாளங்களை இவ்வாய்வின் இறுதிப் பகுதி பேசுகின்றது. நடுநிலைத் தன்மை இந்த இஸ்லாமிய சமூகத்தின் பண்பாகும், இதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. 'வஸதிய்யா' வாழ்க்கை வழிகாட்டியாகும். இது வாழ்வின் ஓரிரு விடயங்களை மாத்திரம் கவனித்திற்கொள்வதில்லை. மாறாக, அனைத்து விடயங்களையும் நடுநிலைமையாக பேணிக் கொள்ள வழிகாட்டுகின்றது போன்றன இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாக அமைந்துள்ளன.

“அல் இஸ்லாம் தீனுல் வஸதிய்யா” (இஸ்லாம் நடுநிலை மார்க்கம்), அப்துல் அஸீஸ் அப்துர் றஹ்மான் அவ்தா என்பவர் எழுதிய நூலில் ‘வஸதிய்யா என்பதன் கருத்தை விரிவாக கலந்துரையாடுகின்றார். அதனைத் தொடர்ந்து, அல்குர்ஆனிலும் அல்ஹதீஸிலும் அதன் பிரயோகங்களை முன்வைக்கின்றார். அவ்வாறே, இஸ்லாமிய விடயங்களில் அதன் பின்புலத்தை தெளிவாகப் பேசுகின்றார்.

எனினும் எமது இந்த ஆய்வானது, அல்குர்ஆனில் காணப்படுகின்ற ஸூரதுல் பகறா, 143வது வசனத்திலுள்ள ‘உம்மதன் வஸதா’ சொற்றொடரை ஆய்வுக்குட்படுத்துவதாக அமைகின்றது. மேற்கூறப்பட்ட ஆய்வுகள் அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவில் இஸ்லாத்தின் நடுநிலைத் தன்மையை ஆராய்கின்ற அதேநேரம் இவ்வாய்வானது குறித்த வசனத்திற்கு தப்ஸீர் ஆசிரியர்களினால் முன்வைக்கப்பட்ட விளக்கங்களை அடையாளப்படுத்துகின்றது. அத்துடன், அல்குர்ஆன் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதற்கிணங்க ஆரம்பகால, நவீனகால தப்ஸீர்களில் இச்சொற்றொடருக்கான விளக்கங்களை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்வது ஏனைய ஆய்வுகளில் காணப்படும் ஆய்வு இடைவெளியை நிரப்புவதாக அமைகின்றது.

**கலந்துரையாடல்:**

இவ்வாய்வின் நோக்கத்தை அடையும் முகமாக, ஆரம்பகால தப்ஸீர் நூல்களுக்காக ‘உம்மஹாதுத் தபாஸிர்’இல் காணப்படும் பின்வரும் நூற்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. அல்கஷ்ஷாப் - ஸமக்ஷரி
2. அத்தப்ஸீர் அல்கபீர் - அர்ராஸி
3. அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன் - குர்துபி
4. தப்ஸீருல் குர்ஆனில் அழீம் - இப்னு கஸீர்
5. அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் த.்.வீல் - பய்ழாவி

அவ்வாறே, நவீனகால தப்ஸீர் நூல்களாக பின்வருவன எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. ரூஹுல் ம.்.ஆனி – அலூஸி
2. அத்தஹ்ரீர் வத் தன்வீர் - இப்னு ஆஷூர்
3. அள்வாஉல் பயான் .்.பீ தப்ஸீரில் குர்ஆன் - அஷ்ஷன்கீதீ
4. அல்வஸீத் .்.பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் - தன்தாவீ
5. தப்ஸீருஷ் ஷ.்.ராவீ - முஹம்மத் ஷ.்.ராவீ

**ஆரம்பகால தப்ஸீர் நூல்களில் ‘உம்மதன் வஸதா’ என்பதற்கான விளக்கங்கள்:**

**1. அல்கஷ்ஷாப் - ஸமக்ஷரி:** ஹி. 538ஆம் ஆண்டு ஸமக்ஷர் பிரதேசத்தில் பிறந்த இமாம் அவர்கள் ‘இமாமுல் கபீர்’ (மூத்த அறிஞர்) என அழைக்கப்படுகின்றார். இவர் தப்ஸீர், மொழி, இலக்கண துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவரால் எழுதப்பட்ட இத்தப்ஸீர் நூலானது

இலக்கிய தன்மை கொண்டதாக, வித்தியாசமான அணுகுமுறையை கொண்டதாக காணப்படுகின்றது. இந்நூலில் 'உம்மதன் வஸதா' என்பதற்கான விளக்கம்,

''ஒரு விடயத்தில் நடுநிலைமை இருப்பதை குறிக்கப் பயன்படும் பண்புப் பெயராகும். இதனால் இச்சொல்லானது ஒருமை, பன்மை, ஆண்பால், பெண்பால் ஆகியவற்றை சமத்துவப்படுத்துகின்றது. விடயங்களில் நடுநிலைமை பேணுவது சிறப்புக்குரியதாகும். ஏனெனில், அதிகமானோர் குழப்பத்தை நாடி விரைகின்றனர். இதன்போது, நடுநிலைமைகள் பாதுகாப்பு வேலிகளாக உள்ளன. சமநிலைப் போக்கு என்பது சில சாராரை விட இன்னும் சில சாராரை சார்ந்து இருக்காமல் குழுக்களுக்கிடையில் நீதமாக நடத்தல் என்பதாகும்'' (ஸமக்ஷரி, 2009) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. அத்தப்ஸீர் அல்கபீர் - அர்ராஸி:** ஹி. 544இல் பிறந்த இமாம் அர்ராஸி அவர்கள் தன் தந்தையிடம் அறிவைப் பெற்றுக்கொண்டார். இவரால் எழுதப்பட்ட அத்தப்ஸீர் அல்கபீர் எனும் நூலானது அறிவுக் களஞ்சியமாக காணப்படுகின்றது.

'வஸத்' என்பதை விளக்குவதில் அறிஞர்களுக்கிடையில் பல கருத்துக்கள் காணப்படுகின்றன.

1. 'வஸத்' என்பது நீதம் ஆகும். இதற்கு ஆதாரமாக அல்குர்ஆனில், ''கால அவ்ஸதுஹும்'' (அவர்களில் நடுநிலையுள்ள ஒருவர்) (68:28) என இடம்பெற்றுள்ளது. அவ்வாறே, நபி (ஸல்) அவர்கள் ''ஹைருல் உமூர் அவ்ஸதுஹா'' (விடயங்களில் சிறந்தது அதில் நடுநிலைமையானதாகும்) எனக் கூறியுள்ளார்கள். இமாம் ஜவ்ஹரி அவர்கள் 'அஸ்ஸிஹாஹ் எனும் தனது நூலில் 'வஸ்த்' என்பது நடுநிலை என்று கூறியுள்ளார்கள். கருத்தியல் ரீதியாக நோக்குகின்ற போது, இதற்கு பல விதங்களில் விளக்க முடியும். முதலாவது: வரம்புமீறல், அலட்சியப்படுத்தல் ஆகிய இரு தரப்பிலிருந்தும் தூரமானதாகும். நற்பண்புகளில் நடுநிலை என்பது இவ்விரண்டில் இருந்தும் தூரமானதாகும். இரண்டாவது: இரு சாராரில் ஒரு சாராரின் பால் சார்ந்து செல்லாமையினால் 'வஸத்' என சொல்லப்படுகின்றது. மூன்றாவது: ''இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையுள்ள சமுதாயமாக ஆக்கியுள்ளோம்'' எனும் இறை வசனமானது புகழ்ந்துரைக்கும் பாணியில் வந்துள்ளது. நான்காவது: ஒரு விடயத்தின் மிக நீதமானது நடுநிலையாகும். அதாவது ஏனைய எல்லா விடயத்திலும் சமத்துவமாக செயற்படுவதாகும்.
2. அனைத்திலும் நடுநிலையை பேணுவதே சிறப்புக்குரியதாகும். இதுவே மிக ஏற்றமான தப்ஸீர் (விளக்கம்) ஆகும்.
3. 'புலானுன் அவ்ஸதுனா நஸபன்' (இன்னவர் எங்களில் பரம்பரையால் நடுத்தரத்தில் உள்ளவர்) என்பதன் கருத்து அவர் அதிக சிறப்பு கொண்டவராவார் என்பதாகும். இவர் அவர்களில் பிரதானமானவராகும். அதாவது தலைவர் நடுவில் இருக்க சுற்றிவர அவரை பின்பற்றுவோர் காணப்படல். இதுவே 'வஸத்' என்பதற்கான கருத்தாகும்.

4. அவர்கள் 'வஸதன்' ஆக இருக்க முடியும். அதாவது, மார்க்க விடயங்களில் அத்துமீறலுக்கும் பொடுபோக்கிற்கும் இடையில், கூட்டலுக்கும் குறைத்தலுக்கும் இடையில் நடுநிலையுள்ளவர் ஆவார்கள். அல்லாஹ்விற்கு பிள்ளை உண்டென 'நஸாரா' (கிறிஸ்தவர்கள்) மிகைத்தது போன்று அவர்கள் மிகைத்து செல்லவும் இல்லை. நபிமார்களை கொல்லுதல், வேதங்களை திரிபுபடுத்தல் என யஹுதிகள் குறைத்தல் செய்ததைப் போன்று அவர்கள் செய்யவுமில்லை.

இந்த கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. மாறாக, முரண்பாடானவை அல்ல. அல்லாஹ்வே மிக அறிந்தவன். (அர்ராஸி, 1981)

'இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையுள்ள சமுதாயமாக ஆக்கியுள்ளோம்' எனும் வசனமானது, இச்சமூகத்தைச் சேர்ந்த அன்றையவர்களையும், இன்றையவர்களையும் குறிக்கின்றது. இந்த வசனம் இறங்கப்பட்ட போது வாழ்ந்தவர்களையும், மறுமை நாள் வரை வரப்போகின்றவர்களையும் உள்ளடக்கிக் கொள்கின்றது. 'உம்மதன் வஸதா' என அறியாப் பெயராக (நகீரா)வாக இடம்பெறுவதால், இது எல்லா காலத்தவரையும் குறிக்கின்றது. (அர்ராஸி, 1981)

**3. அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன் - குர்துபி:** ஹி. 600ஆம் ஆண்டு பிறந்த குர்துபி அவர்கள் அந்தலூஸில் வளர்ந்தார்கள். சிந்தனா ஆற்றல் கொண்ட சிறுவனாக காணப்பட்ட இமாம் அவர்கள் பிற்காலத்தில் அறிவு முதிர்ச்சி கொண்டவர்களாக காணப்பட்டார்கள். இவர் எழுதிய நூல்களில் அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன் மிகப் பிரபல்யமானதாகும். இதில் அவர் குர்ஆன் கூறும் சட்டங்கள், ஆதாரங்களைப் பெறுதல், மாறிய மற்றும் மாற்றப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசுகின்றார்கள்.

கஃபதுல்லாஹ் பூமியின் மையத்தில் இருப்பதைப் போன்று உங்களை நாம் மைய சமுகமாக ஆக்கினோம். அதாவது, சமூகங்களுக்கு மேலால் ஆக்கினோம். 'வஸத்' என்பது நீதம் ஆகும். இதன் அடிப்படை, விடயங்களில் சிறந்தது நடுநிலையானதாகும். 'வஸதுல் வாதீ' (பள்ளத்தாக்கின் மையம்): அதிலுள்ள சிறந்த பகுதி, அதில் புற்பூண்டுகள் அதிகமாக காணப்படும். (குர்துபி, 2006)

'வஸத்' (நடுநிலை) என்பது மிகைத்தல், குறைத்தல் இரண்டிற்குமிடையில் நடுத்தரமாக காணப்படுவதாகும். அதாவது, நபிமார்கள் விடயத்தில் கிறிஸ்தவர்கள் மிகைத்தது போன்று இந்த சமுதாயம் மிகைத்து செய்யவுமில்லை. நபிமார்களின் விடயத்தில் யஹுதிகள் குறைத்தல் செய்யதைப் போன்று இந்த சமுதாயம் குறைவு செய்யவுமில்லை. (குர்துபி, 2006)

**4. தப்ஸீருல் குர்ஆனில் அளீம் - இப்னு கஸீர்:** மஜ்தல் பிரதேசத்தில் ஹி. 701இல் பிறந்தார்கள். சிறந்த அறிவாற்றல் கொண்ட இமாம் அவர்களில் நூற்களில் தப்ஸீருல் குர்ஆனில் அளீம் பிரதானமானதாகும். தப்ஸீர் நூல்களில் மிகச் சிறந்தவற்றில் ஒன்றாக இந்நூல் காணப்படுகின்றது. இமாம் அவர்கள் ஒரு அல்குர்ஆன் வசனத்தை கூறி விட்டு அதற்கான பொதுக் கருத்தை தெளிவாக எளிய முறையில் கூறுவார். பின்னர் அல்குர்ஆன், ஸுன்னா, ஸஹாபாக்களின் கூற்றுக்கள் ஆகியவற்றிலிருந்து அதனை விளக்குவார்கள்.

‘வஸத்’ என்பது இங்கு ‘ஹியார்’ (சிறப்புத்தன்மை) ஆகும். அறபிகளில் பரம்பரையாலும் கட்டடங்களாலும் ‘அவ்ஸத்’ ஆனவர்கள் குறைஷிகள் எனக் கூறுவது பொருத்தமானதாகும். அதாவது, அவர்களில் சிறந்தவர்களாவர் என்பதாகும். நபி (ஸல்) அவர்கள் தனது கோத்திரத்தில் ‘வஸதன்’ ஆக இருந்தார்கள். அதாவது, அவர்களில் மிக கண்ணியத்திற்குரியவராக இருந்தார்கள். இந்தவகையில், அல்லாஹ் இந்த சமுதாயத்தை சிறந்ததாக ஆக்கினான். முழுமையாக ஷரீஆ, சிறந்த வழிகாட்டல்கள், தெளிவான போதனைகள் மூலமாக அல்லாஹ் இந்த சமுதாயத்தை சிறப்பித்துள்ளான். (இப்னு கஸீர், 1999)

**5. அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் த.்.வீல் - பய்ழாவி:** பாரிஸிலுள்ள ‘பய்ழா’ பிரதேசத்தில் பிறந்த இமாம் அவர்களின் பிறந்த வருடம் அறியப்படவில்லை. பல்துறை அறிஞராக காணப்பட்ட பய்ழாவி அவர்கள் நடுநிலைப் போக்கை கடைப்பிடிப்பவராக இருந்தார்கள். அனைத்து அறிஞர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தப்ஸீராக அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் த.்.வீல் காணப்படுகின்றது.

“இல்மையும் (அறிவையும்) அமலையும் (வணக்க வழிபாட்டையும்) கொண்டு செயற்படுகின்ற நடுநிலைமையுள்ள சமுதாயமாக காணப்படல். வரம்புமீறல், அலட்சியம் காட்டுதல் ஆகிய இரண்டிற்குமிடையில் நிகழ்கின்ற சிறந்த செயற்பாடாக காணப்படுகின்றது. உதாரணமாக: வீண்விரயம் மற்றும் கஞ்சத்தம் இடையில் கொடையளித்தல், மூர்க்கத்தனம் மற்றும் கோழைத்தனம் இடையில் உற்சாகம் இருத்தல்”. (பய்ழாவி, 1996)

**நவீனகால தப்ஸீர் நூல்களில் ‘உம்மதன் வஸதா’ என்பதற்கான விளக்கங்கள்:**

**1. ரூஹுல் ம.்.ஆனி – அலூஸி: கி.பி.** 1803ஆம் ஆண்டு யூப்ரடிஸ் நதிப் பகுதியில் அமைந்திருந்த ஆலுஸ் தீவில் பிறந்த அலூஸி அவர்கள் முபஸ்ஸிர், சட்டவல்லுனர், இலக்கியவாதி, கவிஞராகக் காணப்பட்டார்கள். நவீன தப்ஸீர் நூல்களில் ஒன்றாக இது கருதப்படுகின்றது. குர்ஆனிய சொற்களை எவ்வாறு மொழிதல், அதன் கருத்துக்கள், அவை தனித்து வருகின்ற போதும் சேர்ந்து வருகின்ற போதும் அவற்றின் சட்டங்கள் மற்றும் அர்த்தங்கள் ஆகியவற்றைக் கொண்ட முறையை இந்நூல் பின்பற்றுகின்றது.

‘வஸதன்’ என்பது அடிப்படையில் அது சார்ந்த பகுதிகளை சமப்படுத்துகின்ற பொருளைத் தருகின்ற பெயர்ச்சொல்லாகும். பிறகு, இச்சொல்லானது, மனிதனுடைய தீய பண்புகளை நடுநிலைப்படுத்தும் மனிதனுடைய நல்ல பண்புகளை குறிக்கப் பயன்பட்டது. அதாவது இ.்.ப்றாத், த.்.ப்றீத் (வரம்புமீறல், அலட்சியம்) இடையில் பேணிக்கொள்ளல் என்பதாகும். சமுதாயம் தவறானவற்றில் ஒன்றுபட்டால் அவர்களின் நடுநிலை சிதைந்துவிடும். (அலூஸி, 1993)

**2. அத்தஹ்ரீர் வத் தன்வீர் - இப்னு ஆஷுர்:** தூனிஸியாவில் கி.பி. 1815இல் பிறந்தார்கள். அவர்களின் ஐம்பது வருட உழைப்பால் இத்தப்ஸீர் நூல் உருவானது. அல்குர்ஆனிலுள்ள 'பலாகா' (அணியிலக்கணம்) விடயங்களைப் பேசுவது இதன் சிறப்பம்சமாகும்.

''சுற்றியுள்ள இடங்களில் மையத்திலுள்ள இடத்தை குறிக்கும் பெயர் 'வஸத்' ஆகும். சுற்றியுள்ள விடயங்களில் சமநிலையில் நிகழும் விடயமாகும். இவை சிலது சிலவற்றுடன் நெருங்கிய தொடர்பில் இருக்காது. இந்த மைய நிகழ்வின் பால் ஏனைய விடயங்களின் ஊடாக ஊடுருவிச் செல்வதன் மூலமே அடைந்துகொள்ள முடியும். இவ்விடத்தில் பாதுகாப்பாகவும், கண்ணியமாகவும் செல்ல வேண்டுமென்பதே அர்த்தமாகும். உதாரணமாக: கால்நடைகளை பள்ளத்தாக்கின் நடுப்பகுதியை சென்றடைய ஓரப்பகுதிகளிலுள்ளவற்றை சாப்பிட வேண்டும். இதன்போது, நடுப்பகுதி அதிக புற்பூண்டுள்ள இடமாக காணப்படும். இவ்வாறே, இராச்சியத்தின் மையப்பகுதி சட்டம் நிறைவேற்றுமிடமாகவும், அந்த பிராந்தியத்தின் நடுப்பகுதி அதன் பிரதான பகுதியாகவும் காணப்படுகின்றது. ஏனெனில், மையப் பகுதிக்கு எதிரிகளால் இலகுவாக வந்தடைய முடியாது. இது சிற்பிக்குள் முத்து இருப்பது போன்றாகும். இந்த அடிப்படையில், கண்ணியம், சிறப்பு, மதிப்பு ஆகியன 'வஸத்' என்பதற்கு கருத்துக்களாக அமைகின்றன. (இப்னு ஆஷுர், 1984)

வரம்பு மீறல், அலட்சியம் காட்டுதல் ஆகிய இரு மோசமான பண்புகளுக்கிடையில் நிகழ்கின்ற தன்மையே 'வஸத்' ஆகும். உதாரணமாக: மூர்க்கத்தனம் மற்றும் கோழைத்தனம் இடையில் வீரம், கஞ்சத்தனம் மற்றும் ஊதாரித்தனம் இடையில் கொடை, கருணை மற்றும் கடுஞ்சித்தம் மத்தியில் நீதம் காணப்படுதல். (இப்னு ஆஷுர், 1984)

இந்த வசனத்தில் இடம்பெற்றுள்ள 'வஸத்' என்பது ஸூரத்து ஆல இம்ரானின் 110ஆவது வசனத்தை ''மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்'' என்பதை விளக்குகின்றது. முஸ்லிம்களை அல்லாஹ் சிறப்பாக்கி அவர்களுக்கு ஷரீஆவை விளக்கி, நடுநிலையானவர்களாக ஆக்கினான். இதனைப் பின்பற்றுவோரின் சிந்தனையை நேர்த்தியாக்கினான். ஏனைய சமூகங்கள் மூழ்கியுள்ள வழிகேடுகளில் இருந்து அவர்களை பாதுகாத்திருப்பதன் மூலம் முஸ்லிம்களை சிறப்பித்துள்ளான்''. (இப்னு ஆஷுர், 1984)

**3. அள்வாஉல் பயான் ஃபீ தப்ஸீரில் குர்ஆன் - அஷ்ஷன்கீதீ:** மொரித்தானியாவில் கி.பி. 1905ஆம் ஆண்டு பிறந்தார்கள். இது அல்குர்ஆன் மூலம் அல்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் கூறும் நூல்களில் ஒன்றாகும். ஒரு மத்ஹபை பின்பற்றி அல்குர்ஆன் வசனங்களில் உள்ள சட்ட விடயங்களை தெளிவுபடுத்துவதை விட அல்குர்ஆனில் இருந்து விளக்கம் கொடுக்கும் தப்ஸீரை மேன்மையாகக் கருதி, இதனை அஷ்ஷன்கீதீ அவர்கள் எழுதியுள்ளார்கள்.

''நீதமான சிறந்த சமுதாயமாக குறிப்பிடல். ஏனெனில், ''மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்'' (3:110) என அல்லாஹ் குறிப்பிடுகின்றான்''. (அஷ்ஷன்கீதீ, 2006)

**4. அல்வஸீத் ∴பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம் - தன்தாவீ:** எகிப்து சோஹாஜ் மாகாணத்திலுள்ள ஸலீமுஷ் ஷர்கிய்யா கிராமத்தில் கி.பி. 1928இல் பிறந்தார்கள். அல்குர்ஆனிய கற்கைகளில் முக்கியத்துவம் பெறுகின்ற நூலாக இது காணப்படுகின்றது. அவ்வாறே, அடிப்படை சட்டக்கலை, த∴வா, அகீதா போன்ற கற்கைகளிலும் தொடர்புபடுகின்றது.

"இஸ்லாமிய சமுதாயத்தை அல்லாஹ் அறிவார்ந்த, நடுநிலையான, சிறந்த சமூகமாக வர்ணிக்கின்றான். உங்கள் கிப்லாவை மையமாக நாங்கள் ஆக்கினோம். ஏனெனில், க∴பதுல்லாஹ்வை மனிதர்கள் ஒதுங்குமிடமாகவும், அவர்களுக்கு பாதுகாப்பானதாகவும் ஆக்கியது போன்று உங்களை நாம் நடுநிலை சமுதாயமாக ஆக்கினோம். அதாவது, உங்களுக்கும் தொழுகையில் நீங்கள் முன்னோக்குகின்ற கிப்லாவிற்கும் இடையில் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிற சமுதாயங்களுக்கிடையில் உங்களை நீதமான நடுநிலையாக ஆக்கினோம். நீங்கள் முன்னைய நபிமார்களை அவர்கள் தங்கள் தூதை எத்திவைத்தார்கள், அவர்கள் பயனடைந்தவற்றைக் கொண்டு உபதேசித்தார்கள் என்று சான்றுபகர்கின்றீர்கள். நீங்கள் நபி (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினீர்கள், அவர்களை ஈமான் கொண்டீர்கள் என நபியவர்கள் சாட்சி கூறும் வகையில் பிற சமுதாயங்களுக்கிடையில் உங்களை நீதமான நடுநிலையாக ஆக்கினோம்". (தன்தாவீ, 1997)

**5. தப்ஸீருஷ் ஷ∴ராவீ - முஹம்மத் ஷ∴ராவீ:** எகிப்திய மார்க்க அறிஞரான முஹம்மத் ஷ∴ராவீ அவர்கள் கி.பி. 1911இல் பிறந்தார்கள். சிறுபராயத்திலேயே அல்குர்ஆனை மனனமிட்ட அவர்கள் பிற்காலத்தில் அல்குர்ஆனுக்கு எளிய முறையில் விளக்கம் கொடுக்கும் முபஸ்ஸிராக (குர்ஆன் விளக்கவுரையாளராக) காணப்பட்டார்கள். அல்குர்ஆனில் காணப்படுகின்ற அம்சங்களை காட்சிகளாக, பிரதிபலிப்புகளை இவர் முன்வைக்கிறார். அதாவது, அல்குர்ஆனில் காணப்படும் விடயங்களுக்கான தனது பிரதிபலிப்பை முன்னிறுத்தி இந்நூலை எழுதியுள்ளார்.

"அல்லாஹ் எங்களை 'உம்மதன் வஸதா' (நடுநிலை சமுதாயம்) ஆக ஆக்கியது அவனுடைய நி∴மத் (அருள்)களில் ஒன்றாகும். நடுநிலை சமூகம் என்பதன் கருத்து, ஈமான், அகீதாவில் நடுநிலையாக இருத்தல். இறைவன் இருப்பதை மறுக்கின்ற பல உள்ளனர். இன்னும் சிலர் வரம்பு மீறி பல கடவுள்களை கொண்டுள்ளனர். இவர்கள் தவறான சாரார் ஆகும். முஸ்லிம்களாகிய எம்மைப் பொறுத்தவரை, 'லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு' (அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையாக எதுவுமில்லை) எனக் கூறுகின்றோம். இதுவே இப்பிரபஞ்சத்தில் தெளிவான அத்தாட்சிகளில் ஒன்றாகும். ஏனெனில், அல்லாஹ்வே இந்த பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவற்றையும் படைத்தான். அவ்வாறே, இஸ்லாம் என்பது நாஸ்திகம், பல கடவுள் கோட்பாட்டிற்கும் இடைப்பட்ட மார்க்கமாகும். இஸ்லாம் துறவறத்திலும், ஆன்மீகத்திலும் நடுநிலைப் போக்கை பேணுகின்றது. (ஷ∴ராவீ, 1991)

இரண்டு விடயங்களில் சிறந்ததை பேணிக்கொள்ளும் நடுநிலைச் சமுதாயமாக அல்லாஹ் எங்களை ஆக்கியுள்ளான். இந்தவகையில், மனோ இச்சைகளிலிருந்து மனிதனை

பாதுகாக்கவே மார்க்கம் வந்தது. அதற்கு மாறாக, மனோ இச்சைகளை பின்பற்ற நாடினால், சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். (ஷ.்.ராவீ, 1991)

அரை நூற்றாண்டிற்கு முன்னர் வந்த சியோனிஸம் அக்கொள்கை சார்ந்தவர்களை மேம்படுத்தியதா இல்லையா? என சிலர் தங்களுக்குள் கேட்டுக் கொள்கின்றனர். இப்போது அதனைப் பாருங்கள். அது பொய்யான, அடிப்படையற்ற செயற்பாடுகளிலேயே கட்டப்பட்டதால், பிறகு அதனை மீள் வாசிப்புக்கு உட்படுத்தினர். இறுதியில், அது முழுமையான இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. சியோனிஸம் இல்லாமல் ஆகியது போன்று முதலாளித்துவமும் இல்லாமல் ஆகிவிடும். ஏனெனில் இவையிரண்டும் நேர் எதிர் விடயங்களாகும் என நாம் கூறுகின்றோம். ஆனால், நாம் நடுநிலை சமுதாயம். இதனால் அல்லாஹ் ஈருலக சிறப்பையும் எமக்குத் தந்துள்ளான். பிரபஞ்சத்திற்கும், மனித வாழ்விற்கும் நீதமான முறையில் அல்லாஹ் வைத்த அவனுடைய வழிமுறையே மிக ஏற்றமானதாகும்''. (ஷ.்.ராவீ, 1991)

**பெறுபேறும், முடிவுரையும்:**

'உம்மதன் வஸதா' எனும் சொற்றொடருக்கான விளக்கத்தை ஆரம்பகால, நவீனகால தப்ஸீர் நூல்களுக்கிடையில் ஒப்பிட்டு நோக்கும் போது, 'வஸதன்' என்பது நடுநிலை, சமநிலை, நேர்மை, சிறப்பு ஆகிய கருத்துக்களில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன. இ.்.ப்றாத், த.்.ப்றீத் ஆகிய இரு சொற்பதங்களையும் இவ்விரு கால தப்ஸீர் நூல்களில் அடையாளப்படுத்த முடிகின்றது. இ.்.ப்றாத் என்பது ஒரு விடயத்தில் வரம்பு மீறி செயற்படுவதைக் குறிக்கின்றது. த.்.ப்றீத் என்பது ஒரு விடயத்தில் பொடுபோக்காக, அலட்சியமாக செயற்படுவதனை குறிக்கின்றது. இந்தவகையில், 'வஸத்' என்பது இவ்விரு நிலைப்பாடுகளிற்கும் இடைப்பட்ட அம்சமாக காணப்படுகின்றது.

இந்த அல்குர்ஆன் வசனத்தில் கூறப்படும் 'உம்மதன் வஸதா' எனும் நடுநிலைச் சமூகமென அல்லாஹ் கூறியிருப்பது நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்களையும், மறுமை நாள் வரை வரப்போகின்றவர்களையும் குறித்து நிற்பதாக இவ்விரு கால தப்ஸீர் நூல்களும் கூறுகின்றன. ஆரம்பகால தப்ஸீர்களில் அறிவையும், அமலையும் கொண்டு நடுநிலைச் சிந்தனையுடன் செயற்பட வேண்டுமென கூறப்படுகின்றது.

ஆரம்பகால தப்ஸீர்களில் 'இந்த சமுதாயம்' என்கிற சொல் பயன்படுத்தப்படுகின்ற அதேநேரம் நவீன தப்ஸீர்களில் 'முஸ்லிம் சமுதாயம்' என குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றது. ஆரம்பகால தப்ஸீர்களில் துறவறம் மற்றும் ஆன்மீகம் இடையில் நடுநிலை பேணுகின்ற விடயம் பற்றி பேசுவதனை விட நவீன தப்ஸீர்களில் இவ்விடயம் அழுத்தமாக சொல்லப்படுகின்றது. நவீன பொருளாதார சிந்தனைகளான சியோனிஸம், முதலாளித்துவம் பற்றிய விளக்கங்களை நவீன தப்ஸீர்களில் காண முடிகின்றது. இவை இரண்டும் நேர் எதிரான அம்சங்களாக காணப்படுவதால், இவை காலத்தால் அழிந்துவிடும். குறிப்பாக, சியோனிஸம் இல்லாதொழிந்து விட்டது. முதலாளித்துவமும் இல்லாமல் ஆக்கப்படும் என

நவீனகால தப்ஸீர்களில் நடுநிலை பேணுவதற்கான விடயத்தில் மேற்கோள் காட்டப்படுகின்றது.

இறுதியாக, 'உம்மதன் வஸதா' என்பதற்குரிய விளக்கத்தில் ஆரம்பகால, நவீனகால தப்ஸீர் நூல்களுக்கிடையில் ஒத்த தன்மைகளை அடையாளப்படுத்த முடிகின்றது. தப்ஸீர் நூல்கள் எழுதப்பட்ட கால கட்டத்தில் காணப்படும் விடயங்களை மையமாக வைத்து, முன்னைய நூல்களில் காணப்படும் விடயங்களையும் உட்பொதிந்த அமைப்பில் தப்ஸீர் நூல்கள் எழுதப்படுகின்றன. இந்தவகையில், காலம் மாறுவது குர்ஆனிய வசனங்களுக்குரிய தப்ஸீர்களில் தாக்கம் செலுத்துவதாக அமைகின்றது. அல்குர்ஆன் மறுமை வரையுள்ள காலத்திற்கு ஏற்புடையது என்றவகையில், அதிலுள்ள வசனங்களுக்கு காலத்தை கருத்திற் கொண்டு விளக்குவது அவசியமானதொன்றாகும். இதுவும் நடுநிலைப் போக்கின் ஓர் அம்சமாகும்.

**உசாத்துணைகள்:**


அர்ராஸி, ∴பக்ருத் தீன், (1981). *அத்தப்ஸீர் அல்கபீர்,* தாருல் ∴பிக்ர்.

அய்யுப், அபுல் பகாஉ. (1993). *அல்குல்லிய்யாத்,* பெய்ரூத்: முஅஸ்ஸிஸதுர் ரிஸாலா.

அலூஸி, ஷிஹாபுத்தீன், (1993). *ரூஹுல் ம.∵ஆனி,* பெய்ரூத்: தாருல் குதுப் இல்மிய்யா.

அஷ்ஷன்கீதீ, முஹம்மத் அமீன். (2006). அள்வாஉல் பயான் ∴பீ தப்ஸீரில் குர்ஆன், தாருல் குதுபுல் இல்மிய்யா.

இப்னு ஆஷூர், முஹம்மத் தாஹிர். (1984). அத்தஹ்ரீர் வத் தன்வீர், தூனுஸ்: அத்தாருத் தூனிஸிய்யா.

இப்னு கஸீர். (1999). *தப்ஸீருல் குர்ஆனில் அழீம்,* தாரு தய்யிபா.

இப்னு பாரிஸ், அஹ்மத். (1991). *மு'ஜமு மிக்யாஸுல் லுகா*, பெய்ரூத்: தாருல் ஜய்ல்.

குர்துபி, அபூ அப்தில்லாஹ். (2006). *அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன்,* முஅஸ்ஸிஸதுர் ரிஸாலா.

தன்தாவீ, முஹம்மத் ஸெய்யித். (1997). *அல்வஸீத் ∴பீ தப்ஸீரில் குர்ஆனில் கரீம்,* எகிப்து: தாரு நஹ்ழா.

பய்ழாவி, நாஸிருத் தீன். (1996). *அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் த.∵வீல்,* பெய்ரூத்: தாரு இஹ்யாஉத் துராஸில் அறபி.

ஸமக்ஷரி. (2009). *அல்கஷ்ஷாப்,* பதி.3., பெய்ரூத்: தாருல் மஆரி.∵ப்.

ஷ.∵ராவீ, முஹம்மத். (1991). தப்ஸீருஷ் ஷ.∵ராவீ, எகிப்து: அக்பாருல் யவ்ம்.

ஹாஷிம், அஹ்மத் உமர். (1998). *வஸத்தியதுல் இஸ்லாம்,* கெய்ரோ: தாருர் ரஷ்.